Ours bank with
Bank of Baroda



# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்



New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.



| மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 376 | உள்ளூர் - 30.12.2025 | செவ்வாய் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 54 | * Issue 376 | வெளியூர் - 31.12.2025 | புதன் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


**2026 புத்தாண்டு பொதுப் பலன்கள்** | **வங்கியில்.. 400 காலிப்பணியிடங்கள்..!** | **ஜனவரியில் வங்கிக்கு போக பிளானா ?** | **கனிமொழி எம்.பி.யின் தாயார் மருத்துவமனையில்?**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் முத்திரைத் திட்டங்கள் (Iconic Projects) குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ப. செந்தில்குமார், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த. உதயச்சந்திரன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் வே. அமுதவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


# கடந்த 8 மாதங்களில் 1.52 லட்சம் வெளிநாட்டினர் வருகை: சர்வதேச சுற்றுலா பிராண்டாகிறது மதுரை!

மதுரை, டிச. 30–

கடந்த 8 மாதங்களில் 1.52 லட்சம் வெளிநாட்டினர் வருகையால் மதுரை உலகளாவிய சுற்றுலா பிராண்டாக மாறி வருகிறது. கிழக்கின் ஏதென்ஸ் என்று அழைக்கப்படும் மதுரை, உலகில் மிகவும் தொன்மையான நகரங்களில் ஒன்று. வணிக நகரமாக விளங்கிய மூதூர் மதுரை அன்று தொட்டு இன்று வரை பண்பாட்டு தலைநகராகவும், ஆன்மிகம், சுற்றுலா என பல தளத்தில் முன்னேற்றத்தை கண்டுள்ளது. பழமை மாறாத மதுரையின் நகர் அமைப்பு, 2,000 ஆண்டுகளுக்கு மேலாக பண்பாட்டை சுமந்து நிற்கும் மிகவும் பழமையான நகரம் என்பதால், தமிழக சுற்றுலா இடங்களில் வெளிமாநில மற்றும் வெளிநாட்டினரின் தவிர்க்க முடியாத சுற்றுலா இடமாக மதுரை உள்ளது.

தென் தமிழகத்தின் எந்த ஒரு முக்கிய இடத்திற்கு செல்ல வேண்டுமென்றாலும் அதற்கு மைய இடமாக விளங்குவதும் மதுரை தான். இங்கிருந்து தான் ராமேஸ்வரம், கன்னியாகுமரி, கொடைக்கானல், பழநி, மூணாறு போன்ற சுற்றுலா இடங்களுக்கும் செல்ல வேண்டும். அந்த வகையில் தென் தமிழகத்தில் சுற்றுலாப் பயணத்தின் நுழைவாயிலாக மதுரை உள்ளது என்று கூறினால் அது மிகையாகாது.

குவிந்து கிடக்கும் சுற்றுலா இடங்கள்:மீனாட்சியம்மன் கோயில், திருமலை நாயக்கர் மகால், கீழடி அருங்காட்சியகம், அழகர்கோவில், சமணர் மலை, முருகனின்



அறுபடை வீடுகளில் முதல்படை வீடான திருப்பரங்குன்றம், ஆறாம் படை வீடான சோலைமலை, திருமலை நாயக்கர் மகால், வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளம், வானில் இருந்து பார்த்தால் சிலுவை போல் காட்சியளிக்கும் தூய மரியன்னை ஆலயம், காஜிமார் பெரிய பள்ளிவாசல், கோரிப்பாளையம் தர்கா என மதுரை எண்ணற்ற சுற்றுலா இடங்களை தனக்கென பிரத்யேகமாக கொண்டுள்ளது. இதன் காரணமாகவே, மதுரைக்கு வரும் வெளிநாட்டு, வெளிமாநில விருந்தாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

மதுரை முதலிடம்:

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அதிகாரப்பூர்வ புள்ளிவிபரங்களின் படி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் வருகையில் சென்னை, கோவை உள்ளிட்ட முக்கியமான தமிழ்நாட்டு நகரங்களைப் பின்னுக்குத் தள்ளி மதுரை தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது. 2025 ஆகஸ்ட் வரை பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், தமிழ்நாட்டிற்கு மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் சுமார் 3.75 கோடி பேர் வந்துள்ளனர். வெளிநாட்டினர் 2.45 லட்சம் பேர் வந்துள்ளனர். அதில், மதுரைக்கு 20,12,721 வெளிமாநிலத்தை சேர்ந்த சுற்றுலாப்பயணிகள், 1,52,612 வெளிநாட்டை சேர்ந்த சுற்றுலாப்பயணிகள் என மொத்தமாக 21,65,333 பேர் வருகை தந்துள்ளனர். இதன் மூலம் உலகளவில் சுற்றுலா பிராண்டாக மதுரை மாறி வருகிறது என்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

**24 மணி நேரமும் தூங்காத நகரம்:**

மதுரையில் சுற்றுலா வளர்ச்சிக்குத் தேவையான போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகள் நிறைந்துள்ளன. சர்வதேச விமான சேவை, 24 மணி நேரமும் ஓடிக் கொண்டே இருக்கும் ரயில்களுடன், தூங்காமல் எப்போதும் விழித்துக் கொண்டே இருக்கும். அதனாலே மதுரைக்கு தூங்காநகரம் என்ற பெயரும் இருக்கிறது. மதுரையை மையமாக வைத்து பல வகையான சுற்றுலா திட்டங்களும் உள்ளன. ஆன்மிக சுற்றுலாவிற்கு மதுரை– ராமேஸ்வரமும், தேனிலவு மற்றும் விடுமுறைக்கால சுற்றுலா வழித்தடமாக மதுரை – கொடைக்கானல் ஆகிய இரண்டு முக்கிய சுற்றுலா வழித்தடங்களும் உலகளவில் பிரபலமாக உள்ளன.

**உலகளாவிய சுற்றுலா பிராண்ட் 'மதுரை':**

மதுரை உட்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி குழும ஆலோசகர் டாக்டர் மகேந்திரவர்மன் கூறுகையில், "ஆன்மிகம், உணவு, கலாசாரம், வரலாறு மற்றும் நவீன வளர்ச்சி ஆகிய அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கும் மதுரை, தென் தமிழ்நாட்டின் வளர்ச்சியில் தவிர்க்க முடியாத சக்தியாக மாறி வருகிறது. இதை மேலும் அதிகரித்து, மதுரையின் பொருளாதாரத்தை உயர்த்திட, மதுரை விமான நிலையத்தை முழுமையான சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்த வேண்டும். இதன் மூலம் ஆசியான் மற்றும் வளைகுடா நாடுகளுடனான இரு வழி ஒப்பந்தங்களில் மதுரை சேர்க்கப்படும். மதுரையை ஒரு உலகளாவிய சுற்றுலா பிராண்டாக உருவாக்க வேண்டும். சுற்றுலா சார்ந்த முதலீடுகளை மதுரையைச் சுற்றி ஈர்க்க வேண்டும். தென் தமிழகத்தில் இருந்து அதிகமான சுற்றுலா சார்ந்த தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க வேண்டும். ஐஐடிடிஎம் எனப்படும் சுற்றுலா சார்ந்த படிப்புகளுக்கான ஒன்றிய கல்வி நிறுவனத்தை மதுரையில் நிறுவ வேண்டும்" என்றார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், அரசு செயலாளர்களாக பதவி உயர்வு பெற்ற இரா. லலிதா, அஜய் யாதவ்,ரஷ்மி சித்தார்த் ஜகடே, இரா.கண்ணன் ச.நடராஜன், .அ.சிவஞானம், இல.நிர்மல்ராஜ், சி.அ.ராமன், ஆ.அண்ணாதுரை ஆகியோர் சந்தித்து, வாழ்த்து பெற்றனர். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளார்.

## பிரதமர் மோடி முக்கிய மீட்டிங்..


# பரபரவென ரெடியாகும் பட்ஜெட் 2026..!

## பிப்ரவரி 1, 2026–ல் தாக்கல்!!

புதுடெல்லி, டிச. 30–

இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமான பட்ஜெட் தயாரிக்கும் பணியில் ஒட்டுமொத்த மத்திய அரசும் பணியாற்றி வரும் வேளையில் நாளை பிரதமர் மோடி முக்கியமான கூட்டத்தில் கலந்துக்கொள்ள உள்ளார். தற்போது மத்திய அரசுக்கு இருக்கும் முக்கியமான சவால் என்னவென்றால் வேலைவாய்ப்பை உருவாக்குவதும், ஏற்றுமதி – உற்பத்தி அடிப்படையிலான வர்த்தகத்தை மேம்படுத்துதான். இதேபோல் ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் பல்வேறு ஊக்க திட்டத்தை எப்படி ஸ்ட்ரீம்லைன் செய்து அடுத்தக்கட்ட ஊக்கத்தை வர்த்தக சந்தைக்கு அளிப்பது என்பது மத்திய அரசு முக்கியமான சவலாக இருக்கும்.

இந்த நிலையில் பிரதமர் நரேந்திர மோடி டிசம்பர் 30 ஆம் தேதியன்று நாட்டின் முன்னணி பொருளாதார வல்லுநர்கள் மற்றும் துறை சார்ந்த நிபுணர்களுடன் முக்கியமான சந்திப்பை




பட்ஜெட் 2026 அறிக்கை தயாராகும் முக்கியமான கட்டத்தில் நடத்த உள்ளார். இந்த சந்திப்பில் நாடாளுமன்றத்தில் பிப்ரவரி 1 ஆம் தேதி தாக்கல் செய்யப்படும் மத்திய பட்ஜெட் குறித்த அவர்களது கருத்துகளை கேட்டறிய திட்டமிடப்பட்டுள்ளது. அரசு உயரதிகாரி ஒருவர் இந்த தகவலை ஹிந்து பத்திரிக்கையிடம் தெரிவித்துள்ளார். இது பட்ஜெட் தயாரிப்பின் முக்கிய கட்டமாக இந்த சந்தைப்பை பார்க்கப்படுகிறது. இதேவேளையில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 2026–27 நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை பிப்ரவரி 1, 2026 அன்று தாக்கல் செய்ய உள்ளார். இந்த பட்ஜெட் உலகளாவிய புவிசார் அரசியல் நிச்சயமற்ற நிலைமைகளுக்கு மத்தியில் தயாராகிறது கவனிக்க வேண்டிய ஒன்றாக உள்ளது.

குறிப்பாக அமெரிக்கா இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 50 சதவீதம் வரி விதித்திருப்பது பெரும் சவாலாக உள்ளது. இத்தகைய சூழலில் பொருளாதார வல்லுநர்களின் ஆலோசனை மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. இந்த சந்திப்பில் நிதி ஆயோக் துணைத் தலைவர் சுமன் பெரி, நிதி ஆயோக் தலைமை செயல் அதிகாரி பி.வி.ஆர். சுப்ரமணியம் மற்றும் நிதி ஆயோகின் பிற உறுப்பினர்களும் கலந்துகொள் உள்ளனர். பொருளாதார வல்லுநர்கள் மற்றும் துறை நிபுணர்களுடன் இணைந்து பட்ஜெட் குறித்த அவர்களுடைய கருத்தையும், பார்வையையும் மோடியுடன் இக்கூட்டத்தில் பகிர்ந்து கொள்வர்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சந்திப்பு இந்திய பொருளாதாரத்தின் திசையை தீர்மானிக்கும் முக்கிய நிகழ்வாக உள்ளது. உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் வகையில் பட்ஜெட் உருவாக்கப்படும் என அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பொதுமக்களும் இந்த பட்ஜெட்டில் இருந்து பல எதிர்பார்ப்புகளை கொண்டுள்ளனர். மோடி தலைமையிலான அரசு இந்த எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யுமா என்பதை காத்திருந்து பார்ப்போம்.

# வைகுண்ட ஏகாதசி: பெருமாள் கோவில்களில் சொர்க்க வாசல் திறப்பு...



சென்னை, டிச. 30–

நாடு முழுவதும் இன்று (டிசம்பர் 30),வைகுண்ட ஏகாதசி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, பிரபல கோவில்களான திருப்பதி, ஸ்ரீரங்கம், திருவல்லிக்கேணி உள்பட நாடு முழுவதும் பள்ளி பெருமாள் கோவில்களில் சொர்க்க வாசல் திறக்கப்பட்டது. பக்தர்கள் சொர்கவாசல் வழியாக சென்று எம்பெருமாளின் அருள்பெற்று வருகின்றனர். இன்று (டிசம்பர் 30), அதிகாலை பெருமாள் திருத்தலங்களில் சொர்க்கவாசல் திறக்கப்பட்டது. தமிழகத்தில் ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோவில், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் உள்ளிட்ட முக்கிய பெருமாள் கோவில்களில் சொர்க்கவாசல் திறக்கப்பட்டது.

அதேபோல் திருப்பதி ஏழுமலையான் கோவில்களிலும் சொர்க்க வாசல் திறக்கப்பட்டது. வாசல் வழியாக கடந்து சென்று ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

**திருப்பதி ஏழுமலையான் கோவில்**

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் நள்ளிரவு 1.30 மணிக்கு கோயிலின் வெளிப்புறத்தில் உள்ள சொர்க்க வாசல் திறக்கப்பட்டு, பூஜைகள் நடத்தப்பட்டன. இதன்பின் பக்தர்கள் சொர்க்க வாசலில் அனுமதி க்கப்பட்டனர். தொடர்ந்து கோவிந்தா முழக்கத்துடன் பக்தர்கள் சுவாமி தரிசனம் மேற்கொண்டனர். அதேபோல் சொர்க்க வாசலில் விதவிதமான மலர் அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன.

**ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவில்**

பூலோக வைகுண்டம் என்று அழைக்கப்படும் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் வைகுண்ட ஏகா தசி விழா திருநெடுந்தா ண்டகம் நிகழ்ச்சியுடன் கடந்த டிசம்பர் 19 ஆம் தேதி தொடங்கியது. இன்று(டிசம்பர் 30) காலை 5.45 மணிக்கு சொர்க்கவாசல் திறக்கப்பட்டது. நம் பெருமாள் பாண்டியன் கொண்டை, கிளிமாலை, ரத்தின அங்கி அலங்காரத்தில் பரமபத வாசலை கடந்து எழுந்தருளினார். அப்போது அங்கு குழுமியிருந்த பக்தர்கள் ரங்கா.. ரங்கா.. கோஷத்துடன் சொர்க்கவாசலை கடந்தனர்.ராப்பத்து எனப்படும் திருவாய்மொழி திருநாள் தொடங்குகிறது.

**திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில்**

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலில், இன்று அதிகாலை 4:30 மணிக்கு சொர்க்க வாசல் திறக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

**பெருமாள் கோவில்களில் சொர்க்கவாசல் திறப்பு**

தமிழக முழுவதும் உள்ள பெருமாள் கோவில்களிலும், வெகு சிறப்பாக சொர்க்க வாசல் திறப்பு நிகழ்ச்சி நடந்து வருகிறது. மதுரை, தல்லாகுளம் அருள்மிகு பிரசன்ன வெங்கடாசலபதி கோவில் உள்ளிட்ட தமிழகத்தில் உள்ள அனைத்து வைணவ திருத்தலங்களிலும், நடந்த சொர்க்க வாசல் திறப்பு நிகழ்வில், ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு, பெருமாளை தரிசனம் செய்தனர்.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 30.12.2025
விசுவாவசு தமிழ் வருடம்
மார்கழி மாதம் 15-ம் தேதி

# நீங்கள் ஆன்லைனில் கடன் வாங்குகிறீர்களா?





நீங்கள் ஆன்லைனில் கடன் வாங்க நினைத்தால், இதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஆன்லைன் செயலிகள் மூலம் தனிநபர் கடன் வாங்குவது எவ்வளவு வசதியாக இருந்தாலும், அது சில நேரங்களில் ஒருவரை சிக்கலில் ஆழ்த்தக்கூடும். பல நேரங்களில், ஆன்லைனில் தனிநபர் கடன் வாங்குபவர்கள் மோசடிக்கு ஆளாகிறார்கள். இதுபோன்ற சூழ்நிலையில் இந்த மோசடியை நீங்கள் எவ்வாறு தவிர்ப்பது என்பதைப் பற்றி தெரிந்துகொள்வோம்.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வங்கிகள் பல வகையான கடன்களை வழங்குகின்றன. இந்த கடன்களில் ஒன்று தனிநபர் கடன் ஆகும், இது மக்களின் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய வங்கிகளால் வழங்கப்படுகிறது. இந்த நாட்களில் மக்கள் தனிநபர் கடன் வாங்குவது மிகவும் எளிதாகிவிட்டது. இப்போது வங்கிகள் மட்டுமல்லாமல், பல செயலிகளும் மக்களுக்கு ஆன்லைனில் மிக எளிதான முறையில் தனிநபர் கடன்களை வழங்குகின்றன. அதற்காக மக்கள் வங்கிக்குச் செல்ல வேண்டிய அவசியமும் இல்லை.

இது எவ்வளவு வசதியாக இருந்தாலும், சில நேரங்களில் ஒருவரை சிக்கலில் ஆழ்த்தக்கூடும். பல நேரங்களில், ஆன்லைனில் தனிநபர் கடன் வாங்குவது ஒருவரை மோசடிக்கு ஆளாக்கலாம். ஒருவரின் தகவல்களும் திருடப்படலாம், இது மோசடிக்கு வழிவகுக்கும். இதுபோன்ற சூழ்நிலையில், ஆன்லைனில் தனிநபர் கடன் வாங்கும் போது, ஒரு நபர் சில விஷயங்களில் கவனமாக இருக்க வேண்டும், அதனால் அவருடைய தரவுகள் பாதுகாப்பாக இருக்கும் மற்றும் அவர் மோசடிக்கு ஆளாக மாட்டார்.

நீங்கள் ஒரு செயலி அல்லது இணையதளம் மூலம் தனிநபர் கடனுக்கு விண்ணப்பிக்கும்போது, உங்கள் பான்–ஆதார், வங்கி விவரங்கள் போன்ற தனிப்பட்ட தகவல்களைப் பகிர வேண்டும். இணையதளங்கள், செயலிகள் மூலம், இந்தத் தகவல்கள் பெரும்பாலும் மூன்றாம் தரப்பு விற்பனையாளர்கள், தரவு பகுப்பாய்வு நிறுவனங்களுக்குச் செல்கின்றன. இதுபோன்ற சூழ்நிலையில், இந்தத் தகவல்கள் திருடப்படலாம், இது உங்களுக்கு எதிராக மோசடிக்கு வழிவகுக்கும்.

எந்தவொரு இணையதளம் அல்லது செயலி மூலம் கடனுக்கு விண்ணப்பிக்கும் முன், அந்த செயலி அல்லது தளத்தைச் சரிபார்த்து, அந்தத் தளம் ரிசர்வ் வங்கியால் (RBI) ஒழுங்குபடுத்தப்பட்டதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். எந்தவொரு செயலி அல்லது இணையதளத்திற்கும் தேவையான அனுமதிகளை மட்டும் வழங்குங்கள். உங்கள் தொடர்புகள் அல்லது புகைப்படக் காட்சியகத்திற்கு அணுகலை வழங்க வேண்டாம். செயலி அல்லது இணையதளத்தின் தனியுரிமைக் கொள்கை, அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் கவனமாகப் படியுங்கள்.



## சினிமா துளிகள்..!

### அஜித்குமார் ரேஸிங் தொடர்பான ஆவணப்படத்தின் முன்னோட்ட வீடியோ வெளியானது!



நடிகர் அஜித்குமாரின் ரேசிங் மீதான ஆர்வம் மற்றும் பந்தயத்தில் அவர் செய்த சாதனைகளை குறித்த ஆவணப்படத்தை இயக்குநர் ஏ.எல்.விஜய் தயாரித்து வருகிறார். இந்த நிலையில், மலேசியாவில் ரேஸர் அஜித்குமார் மற்றும் அவரது குழு, மிச்சலின் 12 H கார் பந்தயத்தில் பங்கேற்றது தொடர்பான ஆவணப்படத்தின் முன்னோட்ட வீடியோ வெளியாகி உள்ளது. ஏ.எல்.விஜய் இயக்கத்தில், ஜி.வி.பிரகாஷ் இசையில் இந்த ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. AK–வுடன் மீண்டும் இணைந்தது மகிழ்ச்சி என ஜி.வி.பிரகாஷ் தெரிவித்துள்ளார். இந்த ஆவணப்படம் விரைவில் வெளியாகும் என கூறப்படுகிறது.

### சம்பளத்தை அதிரடியாக உயர்த்திய ராஷ்மிகா!



'புஷ்பா' படத்தில் நடித்து பான் இந்திய நடிகையாக பிரபலமான ராஷ்மிகாவுக்கு அதன்பிறகு அடித்தது அனைத்துமே 'ஜாக்பாட்' தான்.

தமிழில் விஜய் ஜோடியாக நடித்த 'வாரிசு' ரூ.300 கோடியும், இந்தியில் ரன்பீர் கபூர் ஜோடியாக நடித்த 'அனிமல்' படம் ரூ.1,000 கோடியும், அல்லு அர்ஜூன் ஜோடியாக நடித்த 'புஷ்பா–2' ரூ.1,800 கோடிக்கும் அதிகமாக வசூல் குவித்தது.

அவரது நடிப்பில் 'காக்டெயில்', 'மைசா' ஆகிய படங்கள் அடுத்தடுத்து வெளியாக உள்ளன. ஒரு படத்துக்கு ரூ.5 கோடி வரை சம்பளம் பெற்று வந்த ராஷ்மிகா தனது சம்பளத்தை ரூ.10 கோடியாக உயர்த்தியுள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. பெரிய பட்ஜெட் படங்கள் என்றால் ரூ.13 கோடி வரை கேட்பதற்கும் திட்டமிட்டுள்ளாராம்.

இது திரையுலகில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டில் விஜய் தேவரகொண்டாவுடன் திருமண பந்தத்தில் இணையவுள்ள ராஷ்மிகா, காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள நினைக்கிறார்.

# ஜனவரியில் வங்கிக்கு போக பிளான் இருக்கா? உஷார்..




சென்னை, டிச. 30–

2026–ஆம் ஆண்டின் முதல் மாதமான ஜனவரியில் வங்கிப் பணிகளுக்காகச் செல்பவர்கள் கவனிக்க வேண்டிய முக்கியத் தகவல் வெளியாகியுள்ளது. ஜனவரி மாதத்தில் மட்டும் வார விடுமுறைகள் மற்றும் பண்டிகை கால விடுமுறைகளைச் சேர்த்து மொத்தம் 16 நாட்கள் வங்கிகள் மூடப்பட்டிருக்கும் என இந்திய ரிசர்வ் வங்கி (RBI) தெரிவித்துள்ளது. பொதுமக்கள் அதற்கேற்ப வங்கிப் பணிகளை திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

ஜனவரி 2026 : வங்கிகளின் முழுமையான விடுமுறைப் பட்டியல்

ஜனவரி 1: ஆங்கிலப் புத்தாண்டு – சென்னை உட்பட பெரும்பாலான மாநிலங்களில் வங்கிகள் செயல்படாது.

ஜனவரி 2: புத்தாண்டு கொண்டாட்டம் மற்றும் மன்னம் ஜெயந்தி – மிசோரம் மற்றும் கேரளா மாநிலங்களில் மட்டும்.

ஜனவரி 3: ஹஸ்ரத் அலி பிறந்தநாள் – உத்தரப்பிரதேச மாநிலத்தில் மட்டும்.

ஜனவரி 4: ஞாயிற்றுக்கிழமை – நாடு முழுவதும் வார விடுமுறை.

ஜனவரி 10: இரண்டாவது சனிக்கிழமை – நாடு முழுவதும் வங்கி விடுமுறை.

ஜனவரி 11: ஞாயிற்றுக்கிழமை – நாடு முழுவதும் வார விடுமுறை.

ஜனவரி 12: சுவாமி விவேகானந்தர் பிறந்தநாள் – மேற்கு வங்காள மாநிலத்தில் மட்டும்.

ஜனவரி 14: மகர சங்கராந்தி மற்றும் மாக் பிஹு – குஜராத், ஒடிசா மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களில் மட்டும்.

ஜனவரி 15: பொங்கல் மற்றும் சங்கராந்தி – தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் விடுமுறை.

ஜனவரி 16: திருவள்ளுவர் தினம் – தமிழகத்தில் மட்டும் வங்கிகள் செயல்படாது.

ஜனவரி 17: உழவர் திருநாள் – தமிழகத்தில் மட்டும் வங்கிகள் செயல்படாது.

ஜனவரி 18: ஞாயிற்றுக்கிழமை – நாடு முழுவதும் வார விடுமுறை.

ஜனவரி 23: நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்தநாள் – மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா மாநிலங்களில் மட்டும்.

ஜனவரி 24: நான்காவது சனிக்கிழமை – நாடு முழுவதும் வங்கி விடுமுறை.

ஜனவரி 25: ஞாயிற்றுக்கிழமை – நாடு முழுவதும் வார விடுமுறை.

ஜனவரி 26: குடியரசு தினம் – நாடு முழுவதும் தேசிய விடுமுறை.

# கனிமொழி எம்.பி.யின் தாயார் மருத்துவமனையில் அனுமதி..!?

சென்னை, டிச. 30–

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் மனைவி ராசாத்தி அம்மாள் சென்னை சி.ஐ.டி காலனியில் உள்ள மகள் கனிமொழி உடன் வசித்து வருகிறார்.. வயது மூப்பு காரணமாக இவர்க்கு சமீப காலமாகவே அஜீரண கோளாறு மற்றும் வயிற்று வலி பிரச்சனை இருந்து வருகிறது.. இதற்காக கடந்த ஆண்டு ஜெர்மனியில் உள்ள உள்ள பிரபல மருத்துவமனை சென்ற ராசாத்தி அம்மாள் அங்கு 20 நாட்கள் தங்கி சிகிச்சை பெற்று வந்தார்..

இந்த நிலையில் திடீர் உடல்நலக்குறைவு காரணமாக ராசாத்தி அம்மாள் சென்னை க்ரீம்ஸ் சாலையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.. அவருக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்..

வயது மூப்பு காரணமாக அவருக்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும், அவருக்கு உரிய சிகிச்சைகள், ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.. தற்போது சிகிச்சைக்கு பின்னர் ராசாத்தி அம்மாளின் உடல்நிலை சீராக இருப்பதாகவும் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.



# 1-ந்தேதி முதல் 65 எக்ஸ்பிரஸ் ரெயில்களின் வேகம் அதிகரிப்பு!



சென்னை, டிச. 30–

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:– தெற்கு ரெயில்வேக்கான புதிய கால அட்டவணை வருகிற ஜனவரி 1–ந்தேதி முதல் நடைமுறைக்கு வர உள்ளது. இதில் மெயில், எக்ஸ்பிரஸ் ரெயில்களுக்கான நேரம் மாற்றப்பட்டுள்ளது. புதிய பயணிகள் ரெயில், ரெயில் சேவை நீட்டிப்பு, புதிய நிறுத்தங்கள், ரெயிலின் வேகம் அதிகரிப்பு, கூடுதல் பெட்டிகள் இணைப்பு உள்ளிட்ட மாற்றங்கள் அடங்கிய புதிய கால அட்டவணை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, நடப்பாண்டில் 8 புதிய ரெயில்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 4 ரெயில்கள் நீட்டிக்கப்பட்டுள்ளது. 8 ரெயில்கள் மாற்று நேரத்தில் இயக்கப்பட்டு வருகிறது. 44 எக்ஸ்பிரஸ், பயணிகள் ரெயில் எண்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 102 எக்ஸ்பிரஸ் ரெயில்களுக்கு தற்காலிக நிறுத்தம் வழங்கப்பட்டுள்ளது. 22 மெயில், எக்ஸ்பிரஸ் மற்றும் பயணிகள் ரெயில்கள் வேகம் அதிகரிக்கப்பட்டுள்ளது. 7 வந்தே பாரத் ரெயில்களில் கூடுதலாக 40 பெட்டிகள் இணைத்து இயக்கப்படுகிறது. 46 எக்ஸ்பிரஸ் ரெயில், 27 பயணிகள் ரெயில்களில் 62 பெட்டிகள் நிரந்தரமாக இணைக்கப்பட்டுள்ளது.

இதேபோல, வருகிற ஜனவரி 1–ந்தேதி முதல் 65 மெயில், எக்ஸ்பிரஸ் மற்றும் அதிவிரைவு ரெயில்களின் வேகம் அதிகரிக்கப்பட உள்ளது. மேலும், 14 பயணிகள் ரெயில்களின் வேகமும் அதிகரிக்கப்பட உள்ளது. அதன்படி, 5 நிமிடங்கள் முதல் 85 நிமிடங்கள் வரை பயண நேரம் சேமிக்க முடியும்.


குறிப்பாக, செங்கோட்டை–சென்னை எழும்பூர் பொதிகை எக்ஸ்பிரஸ் ரெயில் (12662) வழக்கமான நேரத்தைவிட 20 நிமிடம் முன்னதாகவும், சென்னை எழும்பூர்–குருவாயூர் (16127) 20 நிமிடம் முன்னதாக செல்லும் வகையிலும் வேகம் அதிகரிக்கப்படவுள்ளது. கொல்லம்–தாம்பரம் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்.16102) 85 நிமிடம் முன்னதாக செல்லும் வகையிலும், கோவை–ராமேசுவரம் ரெயில் (16618) 55 நிமிடம் முன்னதாக செல்லும் வகையிலும் வேகம் அதிகரிக்கப்பட உள்ளது.

நாகர்கோவில்–தாம்பரம் எக்ஸ்பிரஸ் ரெயில் (20692) 45 நிமிடம் முன்னதாகவும், தூத்துக்குடி–சென்னை எழும்பூர் (12694) முத்துநகர் எக்ஸ்பிரஸ் 30 நிமிடம் முன்னதாகவும், சென்னை எழும்பூர் – செங்கோட்டை பொதிகை எக்ஸ்பிரஸ் 10 நிமிடம் முன்னதாகவும் சென்றடையும் வகையில் வேகம் அதிகரிக்கப்பட உள்ளது. இதேபோல, நெல்லை–செங்கோட்டை பயணிகள் ரெயில் 35 நிமிடம் முன்னதாகவும், மதுரை–ராமேசுவரம் பயணிகள் ரெயில் 15 நிமிடம் முன்னதாகவும் செல்லும் வகையில் வேகம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் பயணிகளின் பயண நேரம் சேமிக்க முடியும்.

திருப்பதி–ராமேசுவரம் எக்ஸ்பிரஸ் ரெயில் வருகிற 2–ந்தேதி முதல் போலூர் வரையிலும், ராமேசுவரம்–திருப்பதி எக்ஸ்பிரஸ் ரெயில் வருகிற 1–ந்தேதி முதல் போலூர் வரையில் விரிவாக்கப்பட்டுள்ளது. தாம்பரம்–நாகர்கோவில் அந்தியோதியா ரெயில், நாகர்கோவில்–தாம்பரம் அந்தியோதியா எக்ஸ்பிரஸ் ரெயில் சீர்காழி ரெயில் நிலையத்தில் வரை விரிவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ராமேஸ்வரம் மீனவர்கள் 3 பேரை கைது செய்த இலங்கை கடற்படை!



ராமேஸ்வரம், டிச. 30–

ராமேஸ்வரம் மீனவர்கள் 3 பேரை இலங்கை கடற்படை கைது செய்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

நெடுந்தீவு கடற்பரப்பில் மீன் பிடித்துக்கொண்டு இருந்தபோது எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 3 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். மேலும் மீனவர்களின் ஒரு படகையும் பறிமுதல் செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களிடம் இலங்கை கடற்படை விசாரணை நடத்தி வருகிறது. இதனிடையே, மீனவர்கள் கைதான சம்பவம் மீனவ மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதனை தடுக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.


# வங்கதேசத்தின் முதல் பெண் பிரதமர் கலீதா ஜியா காலமானார்!



வங்கதேசம், டிச. 30–

பங்களாதேஷின் முன்னாள் பிரதமரும், பங்களாதேஷ் தேசியவாதக் கட்சியின் (BNP) தலைவருமான பேகம் கலீதா ஜியா செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் காலமானார். அவருக்கு வயது 80. டாக்காவில் உள்ள எவர்கேர் மருத்துவமனையில் நீண்டகாலமாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்ததாக BNP அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.


# சபரிமலை தங்கம் திருட்டு வழக்கில் கைதானவருக்கு 12-ந்தேதி வரை காவல்!




திருவனந்தபுரம், டிச. 30–

சபரிமலை கோவில் தங்கம் திருட்டு வழக்கை கேரள ஐகோர்ட்டு உத்தரவுப்படி சிறப்பு புலனாய்வு குழு விசாரித்து வருகிறது. இந்தக்குழு வழக்கு தொடர்பாக பலரை கைது செய்துள்ளது. இந்த நிலையில் நேற்று தேவசம்போர்டு முன்னாள் உறுப்பினர் விஜயகுமாரை கைது செய்தது. முன்னாள் தலைவர் பத்மகுமாருடன் சேர்ந்து சதி செய்து ஆவணங்களை திருடியதாக அவர் கைது செய்யப்பட்டார்.

பின்னர் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்ட விஜயகுமாரை 12–ந் தேதி வரை காவலில் வைக்க திருவனந்தபுரம் சிறப்பு விஜிலென்சு கோர்ட்டு உத்தரவிட்டது. அவரது ஜாமின் மனு நாளை (31–ந் தேதி) விசாரணைக்கு வர உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# புத்தாண்டு பொதுப் பலன்கள்!




நிகழும் விசுவாவசு வருடம், மார்கழி மாதம் 17–ம் தேதி வியாழக்கிழமை, சுக்லபட்சத்து துவாதசி திதி, கார்த்திகை நட்சத்திரம், சுபம் நாமயோகம், பாலவம் நாமகரணம், கன்னி லக்னத்தில், அமிர்த யோகத்தில், நேந்திரம் 2, ஜீவன் –1 நிறைந்திருக்க, பஞ்சபட்சியில் வல்லாறு வலுவிழந்த நேரத்தில் 2026–ம் ஆண்டு பிறக்கிறது.

வைராக்கிய கிரகமான செவ்வாயின் ஆதிக்கத்தில் இருந்து வந்த 2025–ம் (2+0+2+5=9) ஆண்டு உலகெங்கும் புரட்சிகளையும், பலவிதமான போராட்டங்களையும், நிம்மதியற்ற நிலை யையும் தந்தது. ஒருபக்கம் அடக்கு முறைகள் அதிகமானபோதிலும், மறுபக்கம் குற்றச் செயல்களும், போதை வஸ்துகளால் பாதிப்புகளும் ஏற்பட்டன.

சுபிட்ச கிரகமான சுக்ரனின் ராசியில் இந்த 2026–ம் ஆண்டு பிறப்பதால் உலகெங்கும் அமைதி திரும்பும். மக்கள் அமைதியான வாழ்க்கையை விரும்புவார்கள். ரிஷப ராசியில் வருடம் உதித்திருப்பதால் மக்களி டையே சோம்பல் விலகும். அதிகம் உழைப்பார்கள். சொந்த வீடு, வாகனம் பலருக்கும் அமையும். விவசாயிகள் நவீன முறையில் பயிர்சாகுபடி செய்வார்கள். சிறுதானியங்கள், மூலிகை கள், கீரை வகைகள் மற்றும் மரப்பயிர்களால் அதிக ஆதாயமடைவார்கள். பயிர் காப்பீட்டு முறையால் இழப்பை ஈடுகட்டுவார்கள். பால் உற்பத்தி அதிகரிக்கும். துணிகளின் விலை குறையும். டிவி, கம்ப்யூட்டர், லேப்டாப், செல்போன்களின் பயன்பாடு அதிகரிக்கும்.

எண் ஜோதிடப்படி (2+0+2+6=10=1) ராஜ கிரகமான சூரியனின் ஒன்றாம் எண்ணின் ஆதிக்கத்திலும், ஆயுத நட்சத்திரமான கார்த்திகை நட்சத்திரத்திலும் இந்த வருடம் பிறப்பதால், நாட்டை ஆள்பவர்கள் தங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் தருவார்கள். நவீன ஆயுதங்களையும், ஏவுகணைகளையும், ட்ரோன்களையும், எந்திர மனிதர்களையும் வாங்கிக் குவிப்பார்கள். இந்தியா ராணுவத்துக்கு அதிக நிதியை ஒதுக்கும். புதிய நீர்மூழ்கி கப்பல்கள், பீரங்கி டாங்கிகள், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளையும் உருவாக்கும். ராணுவ வீரர்களுக்கு பாதுகாப்பான அதிநவீன ஆடைகள் அளிக்கப்படும். அண்டை நாடுகள், நம்மை குறி வைத்தாலும், அதற்கு தகுந்த பதிலடியும் உடனே தரப்படும். ரஷ்யா – உக்ரைன் போர் முடிவுக்கு வரும். சீனா மற்றும் இந்தியாவின் ஆதிக்கம் மேலோங்கும்.

ஒரே வருடத்தில் குரு பகவான் மிதுனம், கடகம், சிம்மம் என மூன்று ராசிகளில் பயணிப்பதால் டாலருக்கு மாற்றாக புதிய பணம் நடைமுறைக்கு வரும். வர்த்தகப் போர் அதிகரிக்கும். அமெரிக்காவின் அடக்குமுறை குறையும். கரோனா போன்ற புதிய வகை நோய்கள் பரவுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. தங்கத்தின் விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே போகும். வெள்ளியின் விலையும் போட்டிப் போட்டு அதிகரிக்கும். குரு பகவான் 3 முறை பெயர்ச்சி அடைவதால் மக்கள் ஜனவரி முதல் மே மாதம் வரை நிதானமாகவும், ஜூன் மாதம் முதல் அக். 14–ம் தேதி வரை சாதிக்க வேண்டுமென்ற வைராக்கியத்துடனும், அக்.14–ம் தேதி முதல் டிசம்பர் வரை சேமிக்க வேண்டுமென்ற மனநிலை யுடனும் இருப்பார்கள். உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்களில் புதிய நீதிபதிகள் நியமிக்கப்படுவார்கள். வழக்குகள் விரைவாக விசாரிக்கப்படும். நீதிபதிகளுக்கு எதிராக கருத்து தெரிவிப்பவர்களை கட்டுப்படுத்த புது சட்டங்கள் வரும். எல்லை பாதுகாப்பு அதிகரிக்கும். குறுக்கு வழியில் இந்திய குடியுரிமை பெற்றவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

சூரியனின் நட்சத்திரத்தில் சூரியனின் எண்ணில் இந்த ஆண்டு பிறந்திருப்பதால் மருத்துவத் துறையில் பல சாதனைகள் நிகழ்த்தப்படும். புதிய மருந்துகள் கண்டுபிடிக்கப்படும். சில நுணுக்கமான அறுவை சிகிச்சைகளுக்கு ரோபோக்கள் பயன்படுத்தப்படும். புற்றுநோய் மற்றும் நீரழிவு நோய்களுக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் புதிய மருந்துகள் கண்டுபிடிக்கப்படும். தென் ஆப்பிரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, இலங்கை உள்ளிட்ட நாடுகள் பொருளாதார வீழ்ச்சிகளை சந்திக்கும். மே மாதம் வரை சனிபகவானுக்கு 4–ல் குருபகவான் நீடிப்பதால் வங்கிகளில் நூதனமுறையில் மோசடிகள் அதிகரிக்கும். கடன்களை வசூலிக்க சட்டங்கள் கடுமையாக்கப்படும். பண வீக்கம் அதிகமானாலும், மத்திய அரசின் பெரும் முயற்சியால் சரிசெய்யப்படும். மே மாதம் வரை திரைத்துறை ராசியான துலாவை குருபகவான் பார்ப்பதால் சினிமா வளர்ச்சியடையும். புதிய கலைஞர்கள் புகழடைவார்கள். திரைத்துறை சார்ந்த வர்கள் அரசியலில் விஸ்வரூபம் எடுப்பார்கள். அவர்களால் ஆட்சி அதிகாரங்கள் மாறும். ஆட்சி அதி காரத்தில் அமருவதற்கு உலகெங்கும் போட்டிகள் அதிகரிக்கும்.

சுழற்சி முறையில் பதவிகள் பகிர்ந்தளிக்கப் படும். மனசாட்சிக்கு அப்பாற்பட்ட சம்பவங்கள் அரசியலில் நிகழும். துலாம் இந்த வருடம் முழுவதும் சனிபகவான் மீனத்திலேயே அமர்ந்திருப்பதால் கடலில் கப்பல்கள் மூழ்கடிக்கப்படும். பெட்ரோல் டீசல், காஸ் சிலிண்டர் விலை குறையும். பூமிக்கடியில் புதிய பெட்ரோல், டீசல் படுகைகள் கண்டுபிடிக்கப்படும். சனிபகவானுக்கு பன்னிரண்டாம் இடத்தில் ராகு இருப்பதால் விமான விபத்துகள் மற்றும் கடல் கொள்ளைகள் அதிகரிக்கும். ஜப்பான் இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகளில் சுனாமி பாதிப்புகள் அதிகரிக்கும். கும்ப ராசிக்கு இரண்டாம் இடத்திலேயே சனிபகவான் அமர்ந்திருப்பதால் எரிமலைகள் வெடிக்கும். மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள் விளையாட்டு, அரசியல் உள்ளிட்ட துறைகளில் சாதித்துக் காட்டுவார்கள்.

வருடப்பிறப்பு லக்னத்துக்கு ஆறாம் இடத்தில் ராகு இருப்பதால் தொழில்துறை வளர்ச்சி அடையும். பொருளாதாரம் மேம்படும். பன்னிரெண்டாம் இடத்தில் கேது இருப்பதால் ஆன்மிகத்தலங்கள், மழை வெள்ளத்தால் பாதிப்படையும். கலவரம், ஊர்வலம் உண்ணாவிரதம் ஆகியவை கட்டுப்படுத்தப்படும். விண்வெளியில் இயற்கை வளங்களை கண்டறியவும், பாதுகாப்புகளை அதிகப்படுத்தவும் நவீன செயற்கைக் கோள்கள் ஏவப்படும். வான்வெளியில் யுத்தங்கள் ஏற்படலாம். நீதித் துறையில் இருக்கும் சில தவறுகள் கண்டுபிடிக்கப்படும். லக்னத்துக்கு 4–ம் வீட்டில் புதனுடன், சுக்கிரன், சூரியன், செவ்வாய் மூன்று கிரகங்கள் சேர்ந்திருப்பதால் கல்வித் துறை வளர்ச்சி அடையும். மாணவர்கள் படிப்பில் ஆர்வம் காட்டுவர். புதிய கல்வி நிறுவனங்கள் தொடங்கப்படும். செயற்கை நுண்ணறிவு (AI), அக்கவுண்ட்ஸ், சட்டம், சைபர் கிரைம், மருத்துவம் சம்பந்தப்பட்ட படிப்புகள் பிரபலமாகும். வருடப்பிறப்பு லக்னமான கன்னி லக்னத்தை சனிபகவான் நேருக்கு நேர் பார்த்துக்கொண்டே இருப்பதால் மக்களிடையே போர் மற்றும் நோய் பயம் அதிகரிக்கும். பாதுகாப்பும் ஆரோக்கிய மும் இருந்தால் போதும் என்ற அளவுக்கு சூழ்நிலைகள் உருவாகும். கன்னி ராசியை சனிபகவான் பார்ப்ப தால் மென்பொருள் துறையில் வேலை வாய்ப்புகள் குறையும். செயற்கை நுண்ணறிவால் உண்மைக்கு புறம்பான விஷயங்கள் திரிக்கப்படும். பொய்மையான விஷயங்கள் வளர்ச்சி அடையும். வருடம் பிறக்கும்போது செவ்வாய் வலுத்துக் காணப்படுவதால் விளையாட்டுத் துறை வளர்ச்சி அடையும் உலகெங்கும் இந்திய வீரர்கள் சாதித்துக் காட்டுவார்கள். இந்த 2026–ம் ஆண்டு கடந்த ஆண்டை விட மக்களிடையே விழிப்புணர்வையும், சமயோஜித புத்தியையும் தருவதாக அமையும்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## ஜிம், டயட் இல்லை.. இப்படி நடந்தாலே, கொழுப்பு உருகிவிடும்..!

இன்றைய காலகட்டத்தில் உடல் எடையைக் குறைப்பது ஒரு பெரிய சவாலாகிவிட்டது. இதற்காக, பலர் உடற்பயிற்சிக் கூடங்களில் மணிக்கணக்கில் வியர்வை சிந்துகின்றனர். மற்றவர்கள் கடுமையான உணவுக்கட்டுப்பாட்டு விதிகளைப் பின்பற்றுகிறார்கள். இருப்பினும், வெறும் நடப்பதன் மூலமே எந்த முயற்சியும் இல்லாமல் உடல் எடையைக் குறைக்கலாம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

சாதாரணமாக நடப்பதைத் தவிர, சில குறிப்புகளைப் பின்பற்றுவதன் மூலம் நீங்கள் எளிதாக ஒல்லியாக மாறலாம். நடப்பதன் மூலம் அற்புதமான பலன்களைப் பெறுவதற்கான 5 எளிய வழிகள் குறித்து பார்க்கலாம்..

நடைப்பயிற்சியின் நன்மைகள்: நடப்பது கலோரிகளை எரிப்பது மட்டுமல்லாமல், உடலின் வளர்சிதை மாற்றத்தையும் வேகப்படுத்துகிறது. இது செரிமானத்தை மேம்படுத்துகிறது. இது எல்லா வயதினரும் செய்யக்கூடிய சிறந்த உடற்பயிற்சி ஆகும். தொடர்ந்து நடப்பது மூட்டு வலி ஏற்படும் அபாயத்தையும் குறைக்கிறது.

சாப்பிட்ட பிறகு: பலர் சாப்பிட்ட உடனேயே படுத்துவிடுகிறார்கள். ஆனால் சாப்பிட்ட பிறகு 10 முதல் 20 நிமிடங்கள் வேகமாக நடப்பது இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவும். இது உணவை விரைவாக ஜீரணிக்க உதவுகிறது மற்றும் கொழுப்பு சேர்வதைத் தடுக்கிறது.

பவர் வாக்கிங்: சாதாரண நடைப்பயிற்சிக்கும் பவர் வாக்கிங்கிற்கும் இடையே பெரிய வித்தியாசம் உள்ளது. பவர் வாக்கிங் என்பது கைகளைத் தாளத்துடன் வீசி, வேகமான நடையில் நடப்பதாகும். இது இதயத் துடிப்பை அதிகரித்து, கலோரிகளை வேகமாக எரிக்கிறது. இது முழங்கால்களில் குறைந்த அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.

மாடிப்படிகளில் ஏறுதல்: சமதளத்தில் நடப்பதை விட மாடிப்படிகளில் ஏறுவது அல்லது மேடு பள்ளமான தரையில் நடப்பதற்கு அதிக முயற்சி தேவைப்படுகிறது. இது உங்கள் தொடை மற்றும் வயிற்றுத் தசைகளில் அழுத்தத்தை அதிகரித்து, பிடிவாதமான கொழுப்பை எரிக்க உதவுகிறது.

லேசான எடையுடன் நடப்பது: நடக்கும்போது ஒரு சிறிய பையை அணிந்துகொள்வது அல்லது கைகளில் லேசான எடைகளைப் பிடித்துக்கொள்வது உங்கள் உடலை கடினமாக உழைக்கத் தூண்டுகிறது. இது குறைந்த நேரத்தில் அதிக கலோரிகளை எரிக்கிறது.

இடைவெளி நடைப்பயிற்சி: ஒரே வேகத்தில் நடக்காமல், வெவ்வேறு வேகத்தில் நடக்கவும். உதாரணமாக, ஒரு நிமிடம் மிக வேகமாக நடந்து, அடுத்த நிமிடம் மெதுவாக நடக்கவும். இப்படிச் செய்வது உடலில் கொழுப்பு எரியும் செயல்முறையை இரட்டிப்பாக்கும்.



பழனி சட்டமன்ற தொகுதி 2026 காண அதிமுக காலண்டரை, முன்னாள் அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் வெளியிட்டார். இதை மாநில எம்ஜிஆர் இளைஞர் அணி துணை செயலாளர் கே ரவிமனோகரன் மற்றும் மாவட்ட இளைஞரணி செயலாளர் அன்வர்தீன், ஒன்றிய செயலாளர்கள் முத்துச்சாமி, ஆர் எம் டி சி மாரியப்பன், பேரூர் செயலாளர்கள் பாலசமுத்திரம் சக்திவேல், ஆயக்குடி சசிகுமார், நெய்க்காரப்பட்டி விஜயசேகரன், ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

### கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பணி, பயிற்சி மற்றும் தொடர் மருத்துவ சிகிச்சைக்கு செல்ல


## இலவச பயண அட்டை பெற இ-சேவை மையங்களில் விண்ணப்பிக்கலாம்!

### மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் தகவல்!!

கிருஷ்ணகிரி, டிச. 30–

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முழுமையாக (100%) கண்பா ர்வையற்ற மாற்றுத்தி றனாளிகள் மாவட்டம் முழுவதும் பயணம் மேற்கொள்ளவும் மற்றும் அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளும் இருப்பிடத்திலிருந்து பணி, பயிற்சிக்கு மற்றும் தொடர் மருத்துவ சிகிச்சைக்கு செல்ல இலவச பயண சலுகை அட்டை வழங்கிட மாற்றுத்திற னாளிகள் மாற்றுத்திறனாளி களுக்கான தேசிய அடை யாள அட்டை (UDID), ஆதார் அட்டை, பணி சான்றிதழ் மற்றும் பயிற்சி சான்றிதழ், புகைப்படம் ஆகிய ஆவ ணங்களுடன் அருகாமையில் உள்ள இ–சேவை மைய ங்களில் TNEGA என்ற ஆன்லைன் முகவரியில் விண்ணப்பித்து இலவச பயண அட்டை பெற்று பயன்பெறலாம் 6T60T மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் தெரிவித்து ள்ளார்.

## அதிரடியாக குறைந்த தங்கம், வெள்ளி விலை...!



சென்னை, டிச. 30–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு 420 ரூபாய் குறைந்து ஒரு கிராம் ரூ.12,600–க்கும், சவரனுக்கு 3,360 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ரூ.1,00,800–க்கு விற்பனையாகிறது. தங்கத்துக்கு போட்டியாக உயர்ந்து வந்த வெள்ளி விலையும் குறைந்துள்ளது. அந்த வகையில், கிராமுக்கு 23 ரூபாய் குறைந்து ஒரு கிராம் வெள்ளி 258 ரூபாய்க்கும் பார் வெள்ளி 2 லட்சத்து 58 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## வடமாநில இளைஞரை தாக்கிய சம்பவம்: தமிழ்நாடு அரசு அறிவுறுத்தல்!





சென்னை டிச. 30–

தமிழக அரசு வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

27.12.2025 அன்று, திருத்தணி ரெயில்வே குடியிருப்பு அருகே, சில நபர்களால் ஒருவர் தாக்கப்பட்டதாக தகவல் கிடைத்தது. அதன் பேரில், திருத்தணி காவல் நிலையத்தில், ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட நபரின் புகாரின் அடிப்படையில் உடனடியாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. பாதிக்கப்பட்டவருக்கு முறையான உதவியும் அளிக்கப்பட்டது.

மேற்கொண்ட புலன் விசாரணையில், இன்ஸ்டாகிராம் ரீல்ஸ் பதிவேற்றம் செய்வதற்கான நோக்கத்துடன், சட்டத்துக்கு முரண்பட்ட 4 இளஞ்சிறார்கள் இந்த குற்றத்தை செய்திருப்பது தெரிய வந்தது.

அவர்கள் 4 பேரும் 28.12.2025 அன்று கைது செய்யப்பட்டு இளையோர் நீதிக்குழு முன்பு ஆஜர்படுத்தப்பட்டனர். அதில் 3 பேரும் செங்கல்பட்டில் உள்ள பாதுகாப்பு இல்லத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர். ஒருவருக்கு ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட சிறுவர்கள் மீது சட்டப்படி தகுந்த மற்றும் உடனடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வழக்கின் விசாரணை தற்போது நடைபெற்று வருகிறது.

இந்த சம்பவம் தவிர பிற மாநில நபர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் சமீபத்தில் ஏதும் நடைபெறவில்லை. பிற மாநில நபர்கள் இங்கு பாதுகாப்பாகவும் இணக்கமாகவும் வாழ்வதற்கு தகுந்த சூழல் நிலவுகிறது.

மற்ற மாநிலங்களைச் சேர்ந்த நபர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய, அவர்கள் வசிக்கும் பகுதிகளிலும், அவர்கள் பணியாற்றும் இடங்களிலும் போதுமான காவல் ரோந்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், தொழிற்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் அடிக்கடி ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டு, பிறமாநில தொழிலாளர்களின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகள் குறித்து கவனம் செலுத்தப்படுகிறது.

இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் தடுக்கப்படுவதை உறுதி செய்வதற்காக கடுமையான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இச்சம்பவத்தின் உணர்வுபூர்வ தன்மையை கருத்தில் கொண்டு, தாக்குதல் தொடர்பான இவ்வீடியோவை சமூக ஊடகதளங்களில் பரப்ப வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. அவ்வாறு பரப்பப்படுவதால் பொது அமைதி மற்றும் ஒழுங்கு பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஆன்லைன் ஏல மோசடி வழக்கில் நடிகர் ஜெயசூர்யாவிடம் அமலாக்கத்துறை விசாரணை!



திருச்சூர், டிச. 30–

கேரள மாநிலம் திருச்சூர் பகுதியை சேர்ந்தவர் சாதிக் ரஹீம். இவர் சேவ் பாக்ஸ் ஆன்லைன் ஏல நிறுவனம் நடத்தி வந்தார். இந்த நிறுவனத்தின் செயலி மூலம் முதலீடு செய்தால் மின்னணு பொருட்களை குறைந்த விலையில் ஆன்லைன் மூலம் வாங்கலாம் என்றும், பங்கு தருவதாகவும் ஆசைவார்த்தை கூறப்பட்டது.

இதன் மூலம் பல லட்சம் ரூபாய் மோசடி நடந்ததாக திருவனந்தபுரத்தை சேர்ந்த ஒருவர் கடந்த 2023–ம் ஆண்டு திருச்சூர் கிழக்கு போலீசில் புகார் அளித்தார். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து, சாதிக் ரஹீமை கைது செய்தனர். அந்த நிறுவனத்தின் விளம்பர தூதராக மலையாள பிரபல நடிகர் ஜெயசூர்யா ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளதாக அமலாக்கத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து விசாரணைக்கு ஆஜராகுமாறு நடிகருக்கு அமலாக்கத்துறையினர் அழைப்பு விடுத்தனர். அதன்படி, நடிகர் ஜெயசூர்யா தனது மனைவி உடன் கொச்சியில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜரானார். அவரிடம் அமலாக்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

## 2026 குடியரசு தின விழாவில் தமிழ்நாடு அரசின் அலங்கார ஊர்தி இடம்பெற ஒன்றிய உள்துறை அமைச்சகம் ஒப்புதல்!!



டெல்லி, டிச. 30–

தமிழ்நாடு அரசின் அலங்கார ஊர்தி இடம்பெற ஒன்றிய உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. டெல்லியில் நடைபெறும் 2026 குடியரசு தின விழாவில் தமிழ்நாடு அலங்கார ஊர்தி இடம்பெறுகிறது. பசுமை மின் சக்தி” என்ற தலைப்பில் தமிழ்நாட்டின் அலங்கார ஊர்தி குடியரசு தின விழாவில் இடம்பெறும் என்று கூறப்பட்டுள்ளது. 2024ம் ஆண்டு குடியரசு தின நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் குடவோலை முறை குறித்து அலங்கார ஊர்தி காட்சிப்படுத்தப்பட்டது.

## டிச.31-ம் தேதி மாலை 6 மணிக்கு மேல் நீச்சல் குளங்களில் குளிக்க அனுமதிக்கக் கூடாது : காவல்துறை!



சென்னை, டிச. 30–

மாமல்லபுரம் மற்றும் ஈசிஆர் சாலை பகுதிகளில் உள்ள நட்சத்திர ஓட்டல், விடுதி மேலாளர்களுக்கு காவல்துறை அறிவுறுத்தல் வழங்கி உள்ளது. புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது நள்ளிரவு 1 மணிக்கு மேல் கேளிக்கை நிகழ்ச்சிகள் நடத்தக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது. டிச.31ம் தேதி மாலை 6 மணிக்கு மேல் நீச்சல் குளங்களில் குளிக்க அனுமதிக்கக் கூடாது என்றும் காவல்துறை தெரிவித்துள்ளது.

## மீண்டும் ஒன்றிணையும் அஜித் பவார் - சரத் பவார் - மாநகராட்சி தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டி!



புதுடெல்லி, டிச. 30–

இரண்டு ஆண்டுகளுக்கு முன் தேசியவாத கட்சியை உடைத்து சரத் பவாரின் அண்ணன் மகன் அஜித் பவார் பாஜகவுடன் கைகோர்த்து துணை முதல்வர் பதவி பெற்றார்.

சமீபத்தில் நடந்த மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக தலைமையிலான ‘மகாயுதி’ கூட்டணி வெற்றி பெற்றது. மீண்டும் அஜித் பவார் துணை முதல்வர் ஆனார்.

அங்கு சமீபத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல் முதல் கட்டத்தில் பாஜக மிகப் பெரிய அளவில் வெற்றியை பெற்றது. உள்ளாட்சித் தேர்தல் என்பதால், முதல் கட்டத் தேர்தலிலேயே மகாயுதியில் உள்ள பாஜக, ஷிண்டே சிவசேனா, அஜித் பவாரின் தேசியவாத காங்கிரஸ் ஆகியவை தனித்தனியே போட்டியிட்டன.

2–வது கட்டமாக புனே, பிம்ப்ரி சிஞ்ச்வட் உள்ளிட்ட 29 மாநகராட்சிகளுக்கு வரும் 15–ந்தேதி தேர்தல் நடைபெறுகிறது.

இந்நிலையில் பிம்ப்ரி சிஞ்ச்வட் மாநகராட்சி தேர்தலில் சரத்பவார் கட்சியும், எதிரணியில் உள்ள அஜித் பவார் கட்சியும் கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன.

உள்ளாட்சித் தேர்தலில் கூட்டணி அமைத்ததன் மூலம் குடும்பம் ஒன்றுபட்டுள்ளது என்று அஜித் பவார் இதை உறுதிப்படுத்தினார்.

பிம்ப்ரி – சின்ச்வாட் எப்போதும் பவார் குடும்பத்தின் கோட்டையாகக் கருதப்பட்டது. இந்நிலையில் குடும்பப் பிளவால் வாக்குகள் சிதறுவதைத் தவிர்க்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.



## வள்ளி கும்மி நடனம் ஆடிய நயினார் நாகேந்திரன், அண்ணாமலை!

கோவை, டிச. 30–

தமிழக பா.ஜனதா மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் ‘தமிழகம் தலை நிமிர தமிழனின் பயணம்’ என்ற தலைப்பில் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்களை சந்தித்து வருகிறார்.

அதன்படி கோவை மலுமிச்சம்பட்டியில் நேற்று நயினார் நாகேந்திரன் 52–வது சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இதையொட்டி அங்கு தமிழக சட்டமன்றம் போன்று பிரசார மேடை அமைக்கப்பட்டு இருந்தது. தமிழக பொறுப்பாளர் அரவிந்த் மேனன், முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை முன்னிலை வகித்தனர்.

அப்போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட நடனக் கலைஞர்களின் வள்ளிக்கும்மி நடன நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை ஆர்வத்துடன் பார்த்த மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை ஆகியோர் கலைஞர்களுடன் இணைந்து வள்ளி கும்மி ஆட்டம் ஆடி மகிழ்ந்தனர்.




**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881


## வேலை வாய்ப்பு

### STATE RECRUITMENT BUREAU

In the Notification No. 02–2025, dated 11.12.2025, State Recruitment Bureau issued Notification for Direct Re–cruitment to 50 vacancies in the post of Assistant in Tamil Nadu State Apex Cooperative Bank functioning under the control of Registrar of Cooperative societies. In the notification,

1) The horizontal reservation–wise break–up of the number of vacancies have been revised as given below.

| Communal Category | | | Vacancies as per notification dated 11.12.2025 | Revised Vacancies |
|---|---|---|---|---|
| Backlog BC | PWBD (ASD / MD) | | 1 | 2 |
| BC (OBCM) | G | PSTM | 2 | 1 |

2) Para No. 11.3 in the Notification is omitted

Published By,
Deputy Director / Public Relations Officer,
Cooperative Department Chennai–10.

மாநில ஆள்சேர்ப்பு நிலையம்
செய்திக் குறிப்பு எண். 04/2025
நாள்:29.12.2025

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியில் காலியாக உள்ள 50 உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கான அறிவிக்கை 11.12.2025 அன்று வெளியிடப்பட்டது. அதன்படி அறிவிக்கையில்,

1) வகுப்புவாரி இடஒதுக்கீட்டில் பின்வருமாறு திருத்தப்படுகிறது.

வகுப்புவாரி இடஒதுக்கீடு காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை அறிவிக்கை எண்.2/2025 நாள் 11.12.2025 –ன்படி திருத்தப்பட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| Backlog BC | PWBD (ASD / MD) | | 1 | 2 |
| BC (OBCM) | G | PSTM | 2 | 1 |

2) அறிவிக்கையில் உள்ள பத்தி எண்.11.3 நீக்கப்படுகிறது.

## BOI வங்கியில்.. 400 காலிப்பணியிடங்கள்..!




பொதுத்துறை வங்கியான பேங்க் ஆஃப் இந்தியா (BOI) தேசிய அளவிலான தொழிற்பயிற்சிக்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

காலிப்பணியிடங்கள்: 400

வயது வரம்பு: பொதுத்துறை வங்கி தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பிக்க குறைந்தபட்சம் 20 வயது நிறைந்து இருக்க வேண்டும். அதிகபடியாக 28 வயது வரை இருக்கலாம்.

கல்வித்தகுதி: விண்ணப்பதார்கள் கட்டாயம் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் வழங்கப்படும் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் பட்டப்படிப்பை முடித்திருக்க வேண்டும். மேலும் 01.04.202 முதல் 01.12.2025 வரையில் கல்வித்தகுதியை பெற்றவராக இருக்க வேண்டும். விண்ணப்பதார்கள் ஒரு மாநிலத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் மற்றும் பயிற்சிக்கான உடற்தகுதியை கொண்டிருக்க வேண்டும்.

யாரெல்லாம் விண்ணப்பிக்க கூடாது? ஏற்கெனவே பேங்க் ஆஃப் இந்தியா வங்கியில் தொழிற்பயிற்சி பெற்றவர்கள் மற்றும் வேறு ஏதேனும் அரசு தொழிற்பயிற்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்க இயலாது. அதே போன்று, 1 வருட பணிக்கான பயிற்சி மற்றும் பணி அனுபவம் பெற்றவர்களும் விண்ணப்பிக்க இயலாது.

உதவித்தொகை: தேர்வாகும் நபர்களுக்கு மாதம் ரூ. 13,000 உதவித்தொகை வழங்கப்படும். வங்கியின் மூலம் ரூ.8,500, அரசு தரப்பின் மூலம் ரூ.4,500 என வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படும் முறை: பேங்க் ஆஃப் இந்தியாவில் தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வு மற்றும் உள்ளூர் மொழித் தகுதி தேர்வு ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.

எழுத்துத் தேர்வு: இந்த எழுத்துத் தேர்வு மொத்தம் 100 கேள்விகள் 100 மதிப்பெண்கள் கொண்டு நடைபெறும். தேர்வு நேரம் 90 நிமிடங்கள் ஆகும்.

எழுத்துத் தேர்வில் இடம்பெறும் பாடப்பிரிவுகள்:
பொது விழிப்புணர்வு
ஆங்கிலம்
நுண்ணறிவு (Reasoning)
கணினி திறன்
உள்ளூர் மொழித் தகுதி

விண்ணப்பதாரர் எந்த மாநிலத்திற்கு விண்ணப்பிக்கிறாரோ, அந்த மாநிலத்தின் உள்ளூர் மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள பணியிடங்களுக்கு தமிழ் மொழி அறிவு கட்டாயம். 10–ம் வகுப்பு அல்லது 12–ம் வகுப்பில் தமிழ் மொழியை பாடமாக படித்தவர்கள், உள்ளூர் மொழித் தேர்விலிருந்து விலக்கு பெறுவார்கள்.

எப்படி விண்ணப்பிப்பது? விண்ணப்பிக்க விரும்புவோர் https://nats.education.gov.in/ என்ற இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். அதனைத்தொடர்ந்து, Apprenticeship with Bank of India என்பதில் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க கடைசி நாள்: 10.01.2026.




மதுரை மணி

உள்ளூர் 30.12.25 வெளியூர் 31.12.25

# ‘ஜனவரியில் கர்நாடக முதலமைச்சராக சிவகுமார் பதவியேற்பார்’ - காங்கிரஸ் எம்.எல்.ஏ உறுதி!

கர்நாடகா, டிச. 30–

கர்நாடக மாநில முதலமைச்சராக டி.கே. சிவகுமார் அடுத்த மாத தொடக்கத்தில் பதவியேற்பார் என காங்கிரஸ் எம்.எல்.ஏ இக்பால் உசேன் மீண்டும் கூறியுள்ளார். சிவகுமாரின் ஆதரவாளரான ராமநகரம் தொகுதி காங்கிரஸ் எம்.எல்.ஏ இக்பால் உசேன் இதுதொடர்பாக நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது, ஜனவரி 6 அல்லது 9 ஆம் தேதிகளில் 200% சிவகுமார் முதலமைச்சராக பொறுப்பேற்பார் என தெரிவித்தார்.



இதற்கு காங்கிரஸ் தலைமை ஒப்புதல் அளித்ததா என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு, ‘தலைவர் சிவக்குமார் ஒரு விஷயத்தைச் சொல்கிறார் என்றால், நிச்சயமாக அப்படி ஒரு ஒப்பந்தம் இருந்தால்தான் சொல்வார். இல்லையென்றால் அவர் அப்படி சொல்லியிருக்கமாட்டார்’ என தெரிவித்தார்.

கர்நாடகாவில் ஆளும் கட்சிக்குள் அதிகார மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில் இந்தப் பேச்சுகள் தொடர்ந்து எழுந்து வருகிறது. 2023–ல் காங்கிரஸ் ஆட்சி அமைக்கும்போது சித்தராமையா மற்றும் சிவகுமார் இருவருக்கும் இடையே ஏற்பட்ட ‘பதவிப் பகிர்வு’ ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இந்த ஊகங்கள் எழுந்து வருகின்றன.

சிவக்குமாரின் தீவிர ஆதரவாளர்கள் அவருக்குப் பதவி வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகின்றனர். எனினும், சித்தராமையாவிற்கு ஆதரவாக அவரது ஆதரவாளர்கள் ஜனவரி 25–ல் மைசூரில் பெரிய அளவிலான மாநாடு நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

இதனிடையே ஜனவரி 6–ஆம் தேதிக்குப் பிறகு, முதலமைச்சர் சித்தராமையா மற்றும் டி.கே. சிவக்குமார் ஆகிய இருவரையும் டெல்லிக்கு வருமாறு காங்கிரஸ் மேலிடம் அழைப்பு விடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த சந்திப்புக்குப் பிறகே முதலமைச்சர் மாற்றம் குறித்த அதிகாரப்பூர்வமான தகவல் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரு தலைவர்களும் தாங்கள் கட்சி மேலிடத்தின் முடிவிற்குக் கட்டுப்பட்டு நடப்பதாகக் கூறியுள்ளனர். அதேசமயம் முதலமைச்சர் சித்தராமையா, காங்கிரஸ் மேலிடம் தன் மீது நம்பிக்கை கொண்டுள்ளதாகவும், தான்தான் ஐந்தாண்டு காலமும் பதவியில் நீடிப்பேன் என்றும் டிசம்பர் 19 அன்று சட்டப்பேரவையில் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் இடைநிலை ஆசிரியர்கள் 5-வது நாளாக போராட்டம்!



சென்னை, டிச. 30–

சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வலியுறுத்தி சென்னையில் இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர்கள் 5–வது நாளாக போராட்டம் நடத்தி வருகின்றனர். திமுகவின் 311–வது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வலியுறுத்தி சென்னை எழும்பூரில் உள்ள கல்வி அலுவலகம் அருகே இடைநிலை ஆசிரியர்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அப்பகுதி பரபரப்புடன் காணப்படுகிறது.

# கோவையில் சர்வதேச ஆக்கி மைதானம்: உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!



கோவை, டிச. 30–

கோவை ஆர்.எஸ்.புரத்தில் மாநகராட்சி சார்பில் ரூ.9.67 கோடியில் ஆக்கி மைதானம் கட்டப்பட்டுள்ளது. 6,500 சதுர மீட்டர் பரப்பளவில், சர்வதேச தரத்தில் இந்த ஆக்கி மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. ஆக்கி மைதானத்தை சுற்றிலும் கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளது. இரவிலும் ஆக்கி போட்டிகள் நடத்த வசதியாக 6 மின்கோபுர விளக்குகள் அமைக்கப்பட்டு உள்ளன.

ஒவ்வொரு மின்கோபுர விளக்கிலும் 500 வாட்ஸ் திறன் கொண்ட 20 எல்.இ.டி. விளக்குகள் பொருத்தப்பட்டு உள்ளன. இதுதவிர மைதான வளாகத்தில் வீரர்கள், வீராங்கனைகளுக்கான உடை மாற்றும் அறை, ஓய்வறை, கழிப்பறை ஆகிய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. ஆக்கி மைதானத்துக்கு தேவையான தண்ணீர் வழங்குவதற்காக தொட்டியும் கட்டப்பட்டு உள்ளது. இந்த நிலையில், இந்த ஆக்கி மைதானத்தை துணை முதல்–அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார். பின்னர் மைதானத்தில் உதயநிதி ஸ்டாலின் சிறிதுநேரம் ஆக்கி விளையாடினார். அதனைத்தொடர்ந்து அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மொத்தம் 10 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

# திருத்தணி முருகன் கோவிலுக்கு 3 நாட்கள் ஆட்டோக்கள் செல்ல தடை!

திருத்தணி, டிச. 30–

திருத்தணி முருகன் கோவிலில் திருப்படி திருவிழா ஆண்டுதோறும் வெகுவிமரிசையாக கொண்டாடப்படுவது வழக்கம். இந்த விழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு, மூலவர் முருகப்பெருமானை தரிசிப்பர். வருகிற 31–ந்தேதி திருப்படி திருவிழாவும், ஜனவரி 1–ந் தேதி புத்தாண்டு தரிசனமும் நடக்கிறது.




விழாவில் கலந்து கொள்ள தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களில் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் வருவார்கள் என்பதால் இன்று (செவ்வாய்க்கிழமை) முதல் வியாழக்கிழமை வரை 3 நாட்கள் மலைக்கோவில் மேல் ஆட்டோக்கள் செல்ல கோவில் நிர்வாகம் தடை விதித்துள்ளது.

இட வசதிக்கேற்ப கார்கள் இயக்கப்படும். மலைக்கோவில் நுழைவுப் பகுதியில் இருந்து படா செட்டிகுளம் வரை பக்தர்கள் கட்டணமின்றி கோவில் பஸ்களில் பயணம் செய்யலாம். இருசக்கர வாகனங்களில் பக்தர்கள் மலைக்கோவில் மேல் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தை போதைப் பொருள் இல்லாத மாநிலமாக மாற்றி இருக்கிறோம்! அமைச்சர் மா. சுப்பிரமணியன்!

சென்னை, டிச. 30–

அமைச்சர் மா. சுப்பிரமணியன், செய்தியாளர்களுடன் பேசுகையில் தெரிவித்ததாவது:



“போதைப் பொருள்களுக்கு எதிராக இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு எவ்வளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை எதிர்க்கட்சியினர் அனைவரும் அறிவார்கள். குறிப்பாக எடப்பாடி பழனிசாமி முதல்வராக இருந்தபோதுதான் போதைப் பொருள் நடமாட்டம் அதிகரித்தது.

குட்கா உள்ளிட்ட போதைப் பொருள்களின் நடமாட்டத்தை தடுக்க வேண்டும் என்று அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலின் கூறினார். இல்லையென மறுத்த நிலையில், மறுநாளே 21 சட்டப்பேரவை உறுப்பினர்கள் பான் மசாலா உள்ளிட்ட பொருள்களை எடுத்துச் சென்று காட்டினர். அக்கறை உள்ள முதல்வராக இருந்திருந்தால் எங்கே கிடைத்தது எனக் கேட்டு நடவடிக்கை எடுத்திருப்பார். ஆனால், 21 எம்எல்ஏக்கள் மீது நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்தார்.

நாங்கள் பொறுப்பேற்ற பிறகு மிகப்பெரிய அளவில் கட்டுப்படுத்து போதைப் பொருள் இல்லாத மாநிலமாக மாற்றியுள்ளோம். கஞ்சாவைப் பொறுத்தவரை தமிழகத்தில் இல்லாத நிலையை உருவாக்கியுள்ளோம். எதிர்க்கட்சியினர் எங்கேயாவது விற்கிறார்கள் என்று கூறினால், அவர்களின் பெயர் ரகசியம் காத்து நடவடிக்கை மேற்கொள்வோம்.

பள்ளி, கல்லூரிகளில் போதைப் பொருள்களுக்கு எதிராக ஆண்டுதோறும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது.” எனத் தெரிவித்துள்ளார்.

# ‘இந்தியா-பாகிஸ்தான் போரை நிறுத்தினேன்...’ - நெதன்யாகு சந்திப்பின்போது டிரம்ப் மீண்டும் பேச்சு!

வாஷிங்டன், டிச. 30–

இந்தியா– பாகிஸ்தான் இடையேயான போரை வர்த்தகத்தை காரணம் காட்டி நிறுத்தியதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் பலமுறை கூறினார். ஆனால் அவரது பேச்சை இந்திய அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது. இருப்பினும் டிரம்ப் தனது கருத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.



அந்த வகையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உடனான சந்திப்பின்போது டிரம்ப் மீண்டும் இது பற்றி பேசியுள்ளார். அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது, அதிபராக பதவியேற்ற பிறகு இதுவரை 8 போர்களை தடுத்து நிறுத்தி உள்ளதாக டிரம்ப் பெருமிதம் தெரிவித்தார். மேலும் இது தொடர்பாக அவர் கூறியதாவது;–

“நான் 8 போர்களை தடுத்து நிறுத்தினேன். குறிப்பாக அஜர்பைஜான் விவகாரம் குறித்து ரஷிய அதிபர் புதின் என்னிடம் கூறுகையில், ‘அந்த போரை நீங்கள் தீர்த்து வைத்ததை என்னால் நம்ப முடியவில்லை. ஏனென்றால் நான் 10 ஆண்டுகளாக முயற்சி செய்து வருகிறேன்’ என்று கூறினார். நான் உண்மையில் அதை ஒரே நாளில் தீர்த்து வைத்தேன்.

வர்த்தகம் தான் இதற்கு காரணம். அவர்கள் வர்த்தகம் செய்கிறார்கள். சண்டையிடும் நாடுகளிடம் இனி உங்களுடன் வர்த்தகம் செய்ய மாட்டோம் என்று கூறினோம். அதோடு நான் 200 சதவீத வரிகளை விதித்தேன். அடுத்த நாளே அவர்கள் அழைத்தார்கள், 35 வருட சண்டையை நிறுத்திவிட்டார்கள்.

இதற்காக எனக்குப் பாராட்டு கிடைத்ததா? இல்லை. நான் இதே போல் 8 போர்களை நிறுத்தி இருக்கிறேன். இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான போரையும் நான் தடுத்து நிறுத்தினேன்.”

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# டெல்லியில் கடும் பனிமூட்டம்: 118 விமானங்கள் ரத்து!

புதுடெல்லி, டிச. 30–



நாட்டின் தலைநகர் டெல்லியில் கடும் குளிர், பனி மற்றும் காற்று மாசு தொடர்ந்து அதிகரித்து காணப்படுகிறது. இதனால் காலையிலேயே பனி படர்ந்து தெளிவற்ற வானிலை நிலவியது. டெல்லி நகரின் பல்வேறு பகுதிகள் பனிப்போர்வை போர்த்தியது போன்று உள்ளது. பகல் நேரத்திலும் சாலையில் வாகனங்கள் முகப்பு விளக்குகளை எரிய விட்டபடியே செல்கின்றன. கடந்த சில நாட்களாக டெல்லியில் பனிமூட்டம் காரணமாக விமானங்களை இயக்க முடியாத சூழல் ஏற்பட்டு உள்ளது. சில சமயங்களில் விமான சேவை ரத்து செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் பனிமூட்டம் காரணமாக டெல்லி விமான நிலையத்தில் இன்று மொத்தமாக 118 விமானங்கள் ரத்து செய்யப்பட்டு உள்ளன. 60 விமானங்களின் புறப்பாடு மற்றும் 58 விமானங்களின் வருகை என மொத்தம் ஏர் இந்தியா, இண்டிகோ உள்ளிட்ட பல்வேறு விமான நிறுவனங்களின் விமான சேவை ரத்துசெய்யப்பட்டன. வானிலை சற்று சீரான பிறகு படிப்படியாக விமான சேவைகள் இயக்கப்படும் என டெல்லி விமான நிலையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருச்சானூர் பத்மாவதி தாயார் கோவிலில் ஜனவரி மாதம் நடைபெறும் விழாக்கள்!

திருமலை திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:– திருச்சானூர் பகுதியில் தேவஸ்தானத்தின் கீழ் செயல்படும் உள்ளூர் கோவில்களில் 2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் பல்வேறு சிறப்பு விழாக்கள் நடக்கின்றன. பலராமகிருஷ்ணர் கோவிலில் ஜனவரி 1 மற்றும் 28–ந்தேதிகளில் ரோகிணி நட்சத்திரத்தை முன்னிட்டு இரவு 7 மணிக்கு ஸ்ரீகிருஷ்ணர் திருச்சி வாகனத்தில் வீதிஉலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். 2, 9, 16, 23 மற்றும் 30–ந்தேதி வெள்ளிக்கிழமைகளில் காலை 6 மணிக்கு திருச்சி உற்சவம் நடக்கிறது. 10–ந்தேதி அஸ்த நட்சத்திரம், 15–ந்தேதி சங்கராந்தி திருநாள் ஆகியவற்றை முன்னிட்டு சூரியநாராயண சுவாமி மாலை 5 மணிக்கு திருச்சி வாகனத்தில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

பத்மாவதி தாயார் கோவில்

19–ந்தேதி உத்திராட நட்சத்திரத்தை முன்னிட்டு திருச்சானூர் பத்மாவதி தாயார் மாலை 6.45 மணிக்கு கஜ வாகனத்தில் எழுந்தருளி கோவிலின் நான்கு மாடவீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

25–ந்தேதி ரத சப்தமி விழாவை முன்னிட்டு பத்மாவதி தாயார் கோவிலில் காலை 7 மணியில் இருந்து இரவு 9.30 மணி வரை வாகன சேவை நடைபெறுகிறது. தாயார் 7 வெவ்வேறு வாகனங்களில் எழுந்தருளி கோவிலின் நான்கு மாடவீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

அதேநாளில் ரத சப்தமி விழாவையொட்டி சூரியநாராயண சுவாமி காலை 6 மணிக்கு குதிரை வாகனத்தில் எழுந்தருளி கோவிலின் நான்கு மாடவீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

24–ந்தேதி உத்திரட்டாதி நட்சத்திரத்தை முன்னிட்டு சுந்தரராஜ சுவாமி மாலை 6 மணிக்கு திருச்சி வாகனத்தில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பித்தளை விலை ஏற்றத்தை அடுத்து பொங்கல் பானை விலை உயர்வு!



கும்பகோணம், டிச. 30–

பித்தளை விலை ஏற்றத்தை அடுத்து பொங்கல் பித்தளை பானைகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு ஒரு கிலோ ரூ.600க்கு விற்கப்பட்ட பித்தளை தகடு தற்போது ரூ.1100ஆக உயர்ந்துள்ளது.

# டெல்லி சிபிஐ அலுவலகத்தில் த.வெ.க. நிர்வாகிகளிடம் 2-வது நாளாக விசாரணை!

டெல்லி, டிச. 30–



கரூர் கூட்ட நெரிசல் வழக்கு தொடர்பாக த.வெ.க. நிர்வாகிகளிடம் சிபிஐ விசாரணை மேற்கொண்டு வருகிறது. நேற்று த.வெ.க. நிர்வாகிகள் என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமாரிடம் 9 மணி நேரம் சிபிஐ விசாரணை நடைபெற்றது. த.வெ.க. நிர்வாகிளிடம் சரமாரியாக கேள்வி எழுப்பி சிபிஐ விசாரணை நடத்திய நிலையில் 2–வது நாளாக விசாரணை நடைபெறுகிறது. டெல்லி சிபிஐ அலுவலகத்தில் த.வெ.க. நிர்வாகிகளிடம் 2–வது நாளாக விசாரணை நடந்துவருகிறது.

## புத்தாண்டு கொண்டாட்டம்:

# சென்னையில் இருந்து 570 சிறப்பு பஸ்கள் இயக்கம்!



சென்னை, டிச. 30–

புத்தாண்டையொட்டி அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக பல்வேறு பகுதிகளுக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன.

கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு இன்று 240 பஸ்களும், நாளை 255 பஸ்களும் இயக்கப்படுகிறது.

கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 55 பஸ்களும் மாதவரத்தில் இருந்து 20 பஸ்களும் இயக்கப்பட உள்ளன.

மேலும் சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைக்கேற்ப ஜனவரி 3–ந்தேதி 525 பஸ்களும், 4–ந்தேதி 765 சிறப்பு பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குனர் மோகன் தெரிவித்து உள்ளார்.

# பயிற்சியாளர் பதவியில் இருந்து கம்பீர் நீக்கம்? கிரிக்கெட் வாரியம் விளக்கம்!


புதுடெல்லி, டிச. 30–

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக கவுதம் கம்பீர் கடந்த ஆண்டு ஜூலை 10–ந்தேதி நியமிக்கப்பட்டார். 2027–ல் நடைபெற உள்ள ஐ.சி.சி. ஒருநாள் உலக கோப்பை வரை அவரது பதவிக்காலம் இருக்கிறது.

கம்பீரின் பயிற்சியின் கீழ் இந்திய அணி ஒருநாள் மற்றும் 20 ஓவர் போட்டிகளில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. சாம்பியன்ஸ் டிராபி, ஆசிய கோப்பையில் சாம்பியன் பட்டம் வென்றது.

ஆனால் டெஸ்டில் இந்திய அணி பெரிய அளவில் வெற்றிகளை பெறவில்லை. சொந்த மண்ணில் நியூசிலாந்து, தென் ஆப்பிரிக்காவிடம் முழுமையாக டெஸ்ட் தொடரை இழந்தது. இதனால் அவர் கடும் விமர்சனத்திற்கு உள்ளானார்.

இதனால் டெஸ்ட் போட்டிக்கு புதிய பயிற்சியாளரை



நியமிக்க பி.சி.சி.ஐ. (இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டு வாரியம்) முடிவு செய்ததாக தகவல் வெளியானது. இதற்காக முன்னாள் வீரர் வி.வி.எஸ். லட்சுமணனை பி.சி.சி.ஐ. அணுகியதாகவும் கூறப்பட்டது. இதை கிரிக்கெட் வாரியம் ஏற்கனவே நிராகரித்து இருந்தது.

இந்த நிலையில் பயிற்சியாளர் பதவியில் இருந்து கம்பீர் நீக்கம் இல்லை என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் மீண்டும் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பி.சி.சி.ஐ துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா கூறியதாவது:–

பயிற்சியாளர் கவுதம் கம்பீர் குறித்து பரவி வரும் யூகங்கள் குறித்து நான் மிக தெளிவாக கூற விரும்புகிறேன்.

இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் கம்பீரை நீக்கவோ அல்லது புதிய பயிற்சியாளரை நியமிக்கவோ எந்த திட்டமும் இல்லை என்பதை பி.சி.சி.ஐ செயலாளர் (தேவஜித் சைகியா) மிகத் தெளிவாக தெரிவித்துவிட்டார்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# ராஷ்மிகா - விஜய் தேவரகொண்டா திருமணம் எப்போது? எங்கே?

திரை நட்சத்திரங்களான ராஷ்மிகா – விஜய் தேவரகொண்டா இருவரும் வரும் 2026 பிப்ரவரி மாதம் திருமணம் செய்து கொள்ளவிருப்பதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



இவர்கள் திருமணம் உதைப்பூரில் உள்ள அரண்மனையில் நடைபெறவிருப்பதாகவும், இரு வீட்டாரும் திருமணத்துக்கு இந்த இடத்தை முடிவு செய்திரப்பதாகவும் கூறப்படுகிறது. நிச்சயதார்த்தம் போலவே, திருமணமும் மிக எளிமையாக உறவினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்கள் மட்டும் அழைத்து நடத்துவதற்கும் திட்டமிட்டுள்ளதாகவும், அதன்பிறகு, திரைப் பிரபலங்களுக்கு ஹைதராபாத்தில் இருவரும் சேர்ந்து வரவேற்பு நிகழ்ச்சி நடத்துவார்களா இல்லையா என்பது மட்டும் இன்னமும் உறுதி செய்யப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இந்த ஆண்டு அக்டோபர் 3ஆம் தேதி இருவருக்கும் மிக ரகசியமாக நிச்சயதார்த்தம் நடைபெற்றது. ஹைதராபாத்தில் நடைபெற்றாலும் இது பற்றி வெளி உலகுக்கு தெரியாமல் ரகசியம் காக்கப்பட்டது. ராஷ்மிகா – விஜய் தேவர கொண்டா இருவருமே தங்களது காதல் மற்றும் திருமணம் குறித்து இதுவரை எதை யும் வெளிப்படையாக அறிவித்தது இல்லை. இருவரும் கீதா கோவிந்தம் படத்தில் முதன் முதலாக இணைந்து நடித்தனர். அடுத்தடுத்து படங்களில் இணைந்து நடித்தபோது நட்பு காதலாகி மாறி, 2026–ல் திருமணமாகவிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020